2580

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6**

ந.க. எண் 12328 / இ / இ2 / 2025 நாள். 11 06.2026

பொருள்: பள்ளிக்கல்வி – பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவ/மாணவியர்களுக்கு பயிலும் பள்ளிகளிலே சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்குதல் சார்ந்து அரசாணை பெறப்பட்டது –சான்றுகள் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை கோருதல் – School Login App– பதிவேற்றம் மேற்கொள்ள செய்தல் – தொடர்பாக.

பார்வை
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.012328/இ/இ2/2025 நாள்.20.03.2025.
2. அரசாணை (நிலை)எண்.06, பள்ளிக் கல்வி (பக5(2)த்துறை நாள்.09.01.2026.

/////

பார்வை 2 இல் காணும் அரசாணையில், பள்ளிக் கல்வித் துறையின் தொலைநோக்குத் திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக பள்ளிக் கல்வித் துறை கீழ் இயங்கும் அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவ/மாணவியர்களுக்கு சாதி சான்றிதழ் மற்றும் இருப்பிட சான்றிதழ் பயிலும் பள்ளிகளிலே மாணவர்களுக்கு வழங்க அரசாணை பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கைக்கு இந்த இருவகை சான்றிதழ்கள் இன்றியமையாத ஆவணங்களாக உள்ளதால் அம்மாணாக்கர்களுக்கு முன்னுரிமை வழங்கி 9 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு செல்லும் மாணாக்கர்கள் மற்றும் 11 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு செல்லும் மாணாக்கர்களில் ஏற்கனவே சான்றிதழ்கள் பெற்றிருக்கும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் இருவகை சான்றிதழ்கள் தேவைப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை அறிய வேண்டியுள்ளது.

எனவே, 2026–2027 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்கள் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களில் (இரு வகை சான்றிதழ்கள் பெற்றிருப்பவர்கள் விவரம் மற்றும் சான்றிதழ்கள் தேவைப்படும் மாணாக்கர்களின் விவரம் ஆகியவற்றை தமிழ்நாடு கல்வி மேலாண்மை தகவல் மைய School Login–இல் உடனடியாக சான்றுகள் பெற்றிருக்கும் மாணாக்கர்கள்/ தேவைப்படும் மாணாக்கர்கள் விவரங்களை ஆம்/இல்லை (Yes/No) என பதிவுகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கி இப்பணிகளை விரைந்து முடித்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

15/6/26

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலம்)
நகல்: அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள். (மின்னஞ்சல் வழியாக)

நகல்:
வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை –05 தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரின் செயல்முறைகள்
ந.க.எண்.2580/ஆ5/2026 நாள். 17. 06.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பலாகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்-632 009.

17/6/26

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து வகை பள்ளிகள்